Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 285

திங்கட்கிழமை
08 செப்ரெம்பர் 2025

ஆவணி 23 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், செப்.8
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தற்போது அவ்வப்போது கிடைத்து வரும் மழை எதிர்வரும் வியாழக்கிழமை வரை தொடர்வதற்கு வாய்ப்புள்ளது என்று எதிர்வுகூறப்பட்டுள்ளது.
2025 ஆம் ஆண்டுக்கான

11

# வெளியகப் பொறிமுறைக்கு இலங்கையில் இடமில்லை!


## ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அறிக்கைக்கு இலங்கை அரசாங்கம் பதில்

**கொழும்பு, செப்ரெம்பர் 8**

**எந்தவொரு வெளியகப் பொறிமுறையும், தற்போது தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க முயற்சிகளுக்கு இடையூறாக அமைவதுடன், சமூகங்களைத் துருவமயப்படுத்தும். அதனால் சர்வ தேசப் பொறிமுறைகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளை ஏற்கமுடியாது என்று இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

11





## கிருஷாந்திக்கு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப்.8
இலங்கை இராணுவத்தால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசுவாமியின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்றுக் கடைப்

09

## நீதியை நிலைநாட்டுவதற்கு இயலுமானவரையும் முயற்சி!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8
இனப்பிரச்சினை நீண்டகாலமாக உள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுதற்கு நாங்கள் இயலுமான முயற்சிகளை எடுக்கின்றோம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த ரில்வின் சில்வாவிடம், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன்னெடுக்

11



## கச்சதீவு எமக்கே உரியது

### யாழ்ப்பாணத்தில் ரில்வின் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8
கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்பது தெளிவான விடயம். கச்சதீவை வேறு எவரும் உரிமைகோர முடியாது என்று மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.
நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவரிடம், கச்சதீவு விவகாரம் தொடர்பில் வினவப்பட்டபோதே அவர்

11

## ராஜபக்சக்களின் சகா கைது

விரிவு
பக்கம்:- 05

## நிமலராஜன் படுகொலை அறிக்கை கையளிப்பு

யாழ்ப்பாணம், செப்.8
ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை தொடர்பான விசாரணை அறிக்கை மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.
நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அவரிடம், யாழ் ஊடக அமையத்

11

## சர்வதேசத்தின் தலையீடுகள் இலங்கைக்குள் அநாவசியம்!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.8
எமது நாட்டின் பிரச்சினைகளில் வெளிப்புறச்சக்திகளை இணைத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. போர்க் குற்றச்சாட்டுகள், பொறுப்புக்கூறல் தொடர்பில் இலங்கைச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்த விடயத்தில் சர்வதேசத்தின் தலையீடுகள் தேவையில்லை என்று

11

பிறந்து 22 நாள்களேயான

## ஆண் சிசு திடீர்ச் சாவு

யாழ்ப்பாணம், செப்.8
யாழ்ப்பாணம் - சுன்னாகத்தில் 22 நாள்களேயான ஆண்சிசுவொன்று நேற்று உயிரிழந்துள்ளது.
தாய்ப்பால் அருந்திவிட்டு உறங்கிய சிசு சிறிது நேரத்தில் அசைவற்றுக் காணப்பட்டுள்ளது.
அதையடுத்து உறவினர்கள் சிசுவை தெல்லிப்பழை மருத்துவமனைக்குக்கொண்டுசென்றுள்ளனர்.
சிசுவைப் பரிசோதித்த

11



### முச்சந்தி முரளி

'உள்ளூர்ப் பொறிமுறை எண்டு இவையும் குண்டுச்சட்டிக்குள்ள தான் குதிரை ஓடப்போயினம் கண்டியளோ'

## விசாரணைக்குப் பொறுப்பாக இலங்கையே இருக்கமுடியும்

### பிரதமர் ஹரிணி திட்டவட்டம்

கொழும்பு, செப்.8
செம்மணிப் புதைகுழி மட்டுமல்ல, வேறு பல மனிதப் புதைகுழிகள் தொடர்பாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. இந்த விசாரணைகளுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளைத் தேவைக்கேற்ப

11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4187 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 12 26 51 80 |
| விசேட எழுத்து | J |

**ஹந்தஹரண ராசி சுப பலன்**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1254 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 18 21 25 26 |

**NLB ஜய**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0213 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 3 6 8 6 |

**மெகா பவர்**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2293 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 17 |
| வெற்றி இலக்கங்கள் | 20 46 58 70 |

**மஹஜன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5945 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 5 5 8 2 4 2 |

**தன நிதானய**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1975 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 07 09 27 47 |
| விசேட எழுத்து | Q |

**அத சம்பத**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0520 |
| ஆங்கில எழுத்து | U |
| வெற்றி இலக்கங்கள் | 8 2 4 2 |

**சுப தவசக்**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0061 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 16 19 29 42 |

# போதைப்பொருள் வலையமைப்பு அரசியல்வாதிகள் தண்டிக்கப்படுவர்

## *பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, செப்.8**

**போதைப்பொருள் விநியோக சங்கிலியின் பின்னால் உள்ள அரசியல்வாதிகள் புகைப்படங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. இது தொடர்பில் தீவிர விசாரணைகளின் முன்னெடுக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்புப் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.**

போதைப்பொருள் கடத்தல்காரர்கள், அவர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகள், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்களை இனங்காண்பதற்கு எமக்குச் சிறந்த சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைளின்போது, முதலில் விநியோக சங்கிலி இல்லாதொழிக்கப்படவேண்டும். முப்படையினர்பொலிஸார்இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

போதைப்பொருள் தயாரிப்புக்குத் தேவையான இரசாயன மூலப்பொருள் அடங்கிய கொள்கலன்கள் பல மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய சில அரசியல்வாதிகளின் புகைப்படங்களும் எமக்குக் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைவாகத் தராதரமின்றி அனைவரும் சட்டத்தின்முன் நிறுத்தப்படுவர்- என்றார். (ச-இ)

# மொனராகலையில் சூரிய மின்சக்திப் பூங்கா

## *நிர்மாணப்பணிகளை ஆரம்பித்தார் ஜனாதிபதி*

கொழும்பு,செப்.8

மொனராகலையில் அமைக்கப்படவுள்ள மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ரிவிதனவி சூரிய மின்சக்திப் பூங்காவின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் ஆரம்பித்தார்.

மொனராகலை மாவட்டத்தில், சியம்பலாண்டுவ, கொட்டியாகலப் பகுதியில், 500 ஏக்கர் காணியில், 140 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இங்கு தேசிய மின்கட்டமைப்பில் 100 மெகாவாட் மின்சாரத்தைச் சேர்ப்பதுடன், ஆண்டுதோறும் 219 கிகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும்.

இந்தத் திட்டத்தின் ஊடாக டீசல் இறக்குமதி மற்றும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைத்து அந்நியச் செலாவணியைச் சேமிக்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2027 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இதன் நிர்மாணப்பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. (ச-இ)

# போதைப்பொருள் குற்றங்கள் ராஜபக்சக்கள் களங்கமற்றவர்கள்

## நாமல் தெரிவிப்பு

கொழும்பு, செப்.8



எமது கரங்களில் இரத்தக்கறை படியவில்லை. சட்டவிரோதச் செயற்பாடுகளுக்குத் துணை போகவில்லை. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்சக்கள் மீது சுமத்த இடமளிக்கப்போவதில்லை. உண்மையை வெளிப்படுத்தும்வரை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் தொடர்பில் பொலிஸார் மாறுப்பட்ட விடயங்களைக் குறிப்பிட்டுள்ளனர்.முறையான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்ளவேண்டும். ஒழுக்கமாகவே நாங்கள் செயற்படுகிறோம். தமது அரசியல் நிலைப்பாட்டுக்கு இந்தச் சம்பவத்தை அரசாங்கம் பயன்படுத்திக்கொள்ளக்கூடாது. நடுநிலையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும்.

போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்சகள்மீது சுமத்த இடமளிக்கப்போவதில்லை - என்றார். (ச-இ)

**சுபிரி தன சம்பத**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0653 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கம் | 7 1 1 5 8 3 |

**Super Ball**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2919 |
| ஆங்கில எழுத்து | F |
| வெற்றி இலக்கம் | 11 12 48 54 |

**சனிதா**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கம் | 28 41 42 79 |
| வெற்றி வாரம் | 5080 |

**SASIRI**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| வெற்றி வாரம் | 0765 |
| வெற்றி இலக்கம் | 01 06 11 |

**லக்ன ராசி**


| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| தனுசு | ♐ |
| வெற்றி இலக்கம் | 06 10 31 54 |
| சீட்டிழுப்பு வாரம் | 4631 |

**KAPRUKA**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | D |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கம் | 12 25 41 58 |
| வெற்றி வாரம் | 2095 |

**அத கோடிபதி**

| | |
|---|---|
| திகதி | 07.09.2025 |
| தினம் | ஞாயிற்றுக்கிழமை |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கம் | 07 16 46 53 |
| வெற்றி வாரம் | 2745 |



# பாதாளக்குழுக்களின் திட்டங்கள் நாடாளுமன்றுக்கு அறிக்கை!

கொழும்பு,செப்.8

கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட பாதாள உலகக் குழுவினரின் நடவடிக்கைகள் மற்றும் நாட்டின் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாட்டுத் திட்டங்கள் தொடர்பாக அரசாங்கம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளது என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்த அறிக்கையை வெளியிடுவார்.

அதேவேளை பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் ஆங்காங்கே நடைபெறும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் குறித்து அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன. (ச-இ)

# இறந்த மீனவர்களுக்கும் ஓய்வூதியம்

## *தேசிய கணக்காய்வு அறிக்கையில் தகவல்*

யாழ்ப்பாணம்,செப்.8

2024ஆம் ஆண்டில் உயிருடன் இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தாமல், சுமார் 9 கோடி ரூபாய் பெறுமதியான ஓய்வூதியம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால், இறந்த மீனவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கணிக்கப்படுகிறது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மீனவர் ஓய்வூதியதாரர்களின் வாழ்க்கைத் தரவு தகவல்கள் பேணப்படாமல் அல்லது புதுப்பிக்கப்படாமல் இருந்ததால் இந்த நிலைமை ஏற்பட்டதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, ஓய்வூதியத் திட்டத்துடன் தொடர்புடைய வாழ்க்கைத் தரவு அமைப்பை உடனடியாக புதுப்பித்துப் பராமரிக்கவேண்டும் என்று கணக்காய்வு அலுவலகம் அதன் தலைவர்களுக்கு பரிந்துரைத்துள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமியப் பொருளாதார அமைச்சின்கீழ் அரச சார்பற்ற நிறுவனங்கள்

## அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு,செப்.8

**இலங்கையில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களைக் கிராமியப் பொருளாதார அமைச்சின்கீழ் நிர்வகிப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது.**

இதுவரை காலமும் பாதுகாப்பு அமைச்சின்கீழ் இயங்கிவந்த அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான தேசிய செயலகம் ஊடாகவே அரச சார்பற்ற நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்பட்டு வந்தன. எனினும், அரச சார்பற்ற நிறுவனங்களில் பெரும்பான்மையான நிறுவனங்கள் கிராமியப் பொருளாதார அபிவிருத்தியையே இலக்காகக் கொண்டுள்ளன. இதன் காரணமாக அவற்றை கிராமியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நிர்வகிப்பதற்கு அரசாங்கம் தற்போதைக்கு உத்தேசித்துள்ளது. அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெகுவிரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## வெல்லவாய பஸ் விபத்து: பாகங்கள் ஆய்வு

கொழும்பு.செப்.8

எல்ல பிரதேசத்தில் 15 பேரின் உயிரிழப்புக்குக் காரணமான விபத்துக்குள்ளான பேருந்தின் பாகங்கள் மேலதிக விசாரணைகளுக்காக இன்று அரச இரசாயனப் பகுப்பாய்வுதிணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளது. விபத்துக்கான காரணம் இதன் மூலம் உறுதிப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. தேசிய போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகள் குழுவினர்நேற்று அந்தச்சிதைவுகளை ஆய்வு செய்தனர். (ச-இ)

## கனிமப் போக்குவரத்துக்கு பாடசாலை நேரங்களில் தடை

கொழும்பு, செப்.8

பாதுகாப்புக் காரணங்களுக்காக பாடசாலை நேரங்களில் கனிமப்பொருள்களை ஏற்றிச்செல்வதற்கு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தடை விதித்துள்ளது.

இதன்படி பாடசாலை நாள்களில் காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையிலும், முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையிலும் கனிமப் போக்குவரத்து நடவடிக்கைகள் இடைநிறுத்தப்படவேண்டும்.

அந்த நேரங்களில் கனிமப் பொருள்களை ஏற்றிச்செல்லும் வாகனங்கள் வீதி ஓரத்தில் உள்ள ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்திவைக்கப்படவேண்டும்.

இதுதொடர்பான விழிப்புணர்வு நாட்டில் உள்ள சகல பிரதேச செயலகங்களின் ஊடாக கடந்த 4 ஆம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## வீதிச்சோதனையில் பணமோசடி; பொலிஸ் கைது

கொழும்பு,செப்.8

பொதுமக்களிடம் இணைய வங்கிச் சேவைகள் ஊடாக பலவந்தமாகப் பணத்தைப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோட்டைப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் தலைமையகத்தில் பணிபுரியும் கான்ஸ்டபிளே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். ச-இ)



## டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தில் யாழ்.பிரதேச செயலகம் தெரிவு

யாழ்ப்பாணம்.செப்.8

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பிரதேச செயலகங்களில் டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைய பிரதேச செயலாளர் சாம்பசிவம் சுதர்சன் அதற்கான கேடயத்தை அண்மையில்பெற்றுக்கொண்டார். பொது நிர்வாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் நாடளாவிய ரீதியில், மாவட்ட ரீதியாக, ஒரு பிரதேச செயலகம் இந்தத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)




## கடுதாசியில மட்டும் இல்லாமல் காரியத்திலையும் காட்டுங்கோ!

'தாயைப் பழிச்சாலும் தண்ணீரைப் பழிக்காதே' எண்டு பழைய ஆக்கள் சொல்லுவினம். அந்தளவுக்கு தண்ணியை உயர்வா மதிச்சு, அதைக் கடவுளா கும்பிட்டு வந்தவை. ஆனால் இப்பவெல்லாம் தண்ணியை எப்பிடிக் காசாக்கலாம் எண்டுதான் பாக்கிறமே தவிர, அதைப் பாதுகாக்கவேணும் எண்டு நினைக்கிறவை சரியான குறைவு. இத்தனைக்கும் தண்ணிப்பிரச்சினையால தான் அடுத்த உலகப்போர் நடக்கும் எண்டெல்லாம் சாத்திரம் சொல்லியும், ஆரும் அதைக் கேக்கிறமாதிரி இல்லை. நிலத்துக்கு கீழ இருக்கிற தண்ணியை கேட்டுக் கேள்வியில்லாமல்கண்டபடி உறிஞ்சிக்கொண்டிருக்கிறம். அதால இன்னும் கொஞ்சநாளில நிலத்தடி நீரே இல்லாமல், குடிக்கிற தண்ணிக்கு மழையையும், போத்தில் தண்ணியையும் நம்பியிருக்கிற நிலைதான் வரப் போகுது.

இப்பிடிப்பட்ட நிலையில சில உள்ளூராட்சி மன்றங்களில 'குழாய்க்கிணறு' அனுமதி இல்லாமல் அடிக்க ஏலாது எண்டு ஓர்டர் போட்டிருக்கினம். இந்த ஓர்டரை தங்கட எழுப்பத்துக்காக போடாமல், அதை சரியா அந்தந்த சபையள் பின்பற்றுறதிலதான் எங்கட தண்ணி வளத்தின்ர எதிர்காலமே இருக்குது. இப்ப கன இடங்களில 'றில்லர்ஸ்' எண்ட பேரோட குழாய்க்கிணறு அடிக்கிறவை பெருகிட்டினம். எங்க வேணுமெண்டாலும் அவை போய் நிலத்தை 'கொம்பிறேசரில' தோண்டியெடுத்து குழாய்க் கிணறு அடிச்சுக் குடுக்கினம். குழாய்க்கிணறு ஆழம் கூடக் கூட காசும் கூட. அதால அவையும் கொஞ்சம் ஆழமாத் தோண்டிக்குடுத்திட்டு போடுவினம். அப்பிடி தோண்டேக்க, அது நிலத்துக்கு கீழ போற நீரோட்டத்தைக் குழப்புமோ, இல்லையோ எண்டெல்லாம் அவை யோசிக்கேறேலை. வீட்டுக்காரர் காட்டிற இடத்தில குழாய்க்கிணறை அடிச்சுக் குடுத்திட்டு காசு வாங்கிறது மட்டுதான் அவைக்குத் தெரியும்.

முந்தியெண்டால் வெட்டுக்கிணறுதான் எல்லா இடமும். அது வெட்டச் செலவும் , காலமும் கூடுதலாப் பிடிக்கும். அதோட வெட்டுக்கிணத்துக்கு பெரிய இடமும் வேணும். வெட்டுக்கிணறு ஊற்று வந்தவுடனேயே வெட்டிறதை நிப்பாட்டிப் போடுவினம். அதோட பெரிய இடம் தேவை எண்டதால முந்தி நாலைஞ்சு வீட்டுக்கு ஒரு கிணறு. ஊருக்கெண்டு பொதுக்கிணறு எண்டு குறைவாத்தான் கிணறுகளும் இருக்கும். ஏக்கரில இருந்து பரப்புக்கு மாறி, இப்ப பரப்பில இருந்து பேர்ச் கணக்கில வீடு கட்டிற நிலமையில நிலங்கள் சுருங்கத் தொடங்கிட்டுது. அப்பிடி சின்ன இடத்தில வீடு கட்டேக்க வெட்டுக்கிணத்துக்கு இடமெங்க இருக்கப் போகுது. அதோட கூட்டுக்குடும்ப வாழ்க்கை மலையேறிட்டதால, நாலைஞ்சு வீட்டுக்கு ஒரு கிணறு எண்ட நிலையும் இல்லை. அதால எல்லாரும் வீட்டுக்கு வீடு குழாய்க்கிணறு தோண்டி,இருக்கிற தண்ணியை எல்லாம் உறிஞ்சிறம். அப்பிடிக் கண்டபடி நிலத்தடித் தண்ணியை உறிஞ்சி அதை கெதியா வத்தப் பண்ணாமல் இருக்க, குழாய்க்கிணறு எங்க தோண்டலாம், எத்தினை அடி தோண்டவேணும், ஒரு கிணத்துக்கும் அடுத்த கிணத்துக்கும் இடையில எத்தினை அடி இடைவெளி இருக்கோனும் எண்ட கட்டுப்பாடுகள் இருக்கோனும். அதுக்கு இப்ப சில உள்ளூராட்சி மன்றங்களின் "குழாய்க்கிணறு அனுமதி இல்லாமல் வெட்டேலாது" எண்ட முடிவு உதவும். தீர்மானமா கடுதாசியில எழுதிப் போட்டு விடாமல், அதை நடைமுறைக்கும் கொண்டு வாறதுதான் தண்ணியைப் பாதுகாக்கும் கண்டியளோ.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான காரியங்களிலும் கூடுதல் கவனம் தேவை. கணவன் மனைவிக்கிடையே வீண் வாக்குவாதம் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** வாழ்க்கைத் துணையின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்ச்சி அடைவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். காரியங்கள் சாதகமாக முடியும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர் பார்த்தபடியே இருக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவதற்கு உகந்த நாள். சிலருக்கு சகோதரவகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கடகம்:** எதிர்பாராத பணவரவு மகிழ்ச்சியில் ஆழ்த்தும். சிலருக்குக் குடும்பத்துடன் குலதெய்வக்கோயிலுக்குச்சென்று பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வீட்டில் உற்சாகம் ஏற்படும்.

**சிம்மம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சுபச்செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் எதிர்பார்த்த சலுகை இழுபறிக்குப் பிறகு கிடைக்கும்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும் சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணை உங்கள் தேவையறிந்து பணஉதவி செய்வார்.

**துலாம்:** எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தடை, தாமதம் ஏற்படும். சகோதரர்கள் உதவி கேட்டு நச்சரிப்பார்கள். கொடுத்த கடனில் ஒரு பகுதி திரும்பக் கிடைக்கும். சுபச்செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**விருச்சிகம்** : தேவையான பணம் கையில் இருப்பதால், செலவுகளை சமாளித்து விடுவீர்கள். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தேவை யற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் பங்குதாரர்களால் சங்கடம் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையாக இருப்பது நல்லது. திடீர் செலவுகளால் கடன் வாங்க நேரிடும். செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். கவனமாக இருக்கவும்.


**மகரம்:** பிள்ளைகளால் பெருமை உண்டாகும். நண்பர்களுக்காகச் செலவு செய்ய வேண்டி வரும். அலுவலகத்தில் மிகவும் உற்சாகமான சூழ்நிலையே காணப்படும். அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சுபச்செலவுகள் ஏற்படும். மனவருத்தங்கள் நீங்கும்.

**மீனம்:** அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பும் சிலருக்கு ஏற்படக்கூடும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும்.

# வட்டக்கச்சி ஸ்ரீ ரங்கநாதரின் பிரமோற்சவம் காண வாரீர்

**இரா.நிசாந்தன்**
ஆசிரியர்



வீரமும், இயற்கை எழிலும் நிறைந்த கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி மாயவனூர் எனும் பிரதேசத்தில் கோயில் கொண்டுள்ள 'ஈழத்து ஸ்ரீரங்கம்' என்று போற்றப்படுகின்ற ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் ஆலய வருடாந்த பிரமோற்சவப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு நாள்கள் சிறப்பாக இடம்பெற்றுவருகின்றது. இந்த பிரமோற்சவப் பெருவிழாவில் சிறப்பு உற்சவங்களாக எதிர்வரும் 12ஆம் திகதியன்று சப்பற உற்சவமும், எதிர்வரும் 13ஆம் திகதி காலை தேர்த் திருவிழாவும், எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை தீர்த்த உற்சவமும், எதிர்வரும் 15ஆம் திகதி இரவு திருக்கல்யாணம் , பூங்காவன உற்சவமும் சிறப்பாக இடம்பெறவுள்ளன.

### பிரமோற்சவ கால அலங்காரங்கள்

பிரமோற்சவ காலங்களில் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு வடிவம் தாங்கிய அலங்காரத்தில் ஸ்ரீ ரங்கநாதர் திருவீதியுலா வருவார். முதலாம் நாளில் ஸ்ரீதேவி, பூதேவி சமேத ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் திருக்கோல மாகவும், இரண்டாம் நாள் சீதாதேவி, இலட்சுமணர் சமேத ஸ்ரீ ராமராகவும், மூன்றாம் நாள் மகாலட்சுமி சமேத நாராயணராகவும், நான்காம் நாள் பாம்பணையில் பள்ளி கொண்ட அனந்தசயனர் திருக்கோலமாக வும், ஐந்தாம் நாள் ஸ்ரீ ஆண்டாள் சமேத அழகிய மணவாளராகவும், ஆறாம் நாள் ஹரி ஹர மூர்த்த வடிவமாகவும், ஏழாம் நாள் குருவாயூரப்பனாகவும் எம்பெருமாள் எழுந்தருளி தன் அடியவர்களுக்கு திருவருட்காட்சி கொடுப்பது கண்கொள்ளாக் காட்சியாகும்.

பிரமோற்சவ காலத்தில் காலை நேரப் பூசைள் யாவும் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பகல் 12 மணிக்கு நிறைவுறும். அதேபோல இரவு நேரப் பூசைகள் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு நிறைவுறும். ஆகவே குறித்த நேரகாலங்களைப் பின்பற்றி அடியவர்கள் பிரமோற்சவ கால பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ளமுடியும். இந்த உற்சவங்களின் போது நாமசங்கீர்த்தனம், பஜனை என்பனவும் இடம்பெறுவது மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

### சிறப்பு உற்சவங்கள்

பிரமோற்சவத்தின் ஒன்பதாம் நாளில் தேர் உற்சவம் மிகவும் சிறப்பாக இடம்பெறும். பகவான் விஸ்ணு கிருஷ்ணராக அவதாரம் செய்த 'கிருஷ்ண ஜெயந்தி' அன்று இவ்வாலயத்தில் தேர் உற்சவம் இடம்பெறுவது சிறப்பாகும். சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டுள் அழகிய சித்திரத்தேரில் ஸ்ரீரங்கநாதப் பெருமாள் எழுந்தருளி தன் அடியவர்களுக்கு அருட்காட்சி கொடுப்பார். மறுநாள் தீர்த்த உற்சவத்தின் போது பஞ்சமூர்த்திகள் சமேதராக ஸ்ரீ ரங்கநாதர் 'சித்தாமிர்த புட்கரணி' எனும் தன் தீர்த்தத் தலத்திற்கு எழுந்தருளி அங்கே தீர்த்த உற்சவம் சிறப்பாக இடம்பெறும்.

### கலைநிகழ்வுகள்

பிரமோற்சவ காலத்தில் இரவு உற்சவத்தில் சுவாமி வெளிவீதி வலம் வந்து ஆலய முன்றில் மாணவர்கள் மற்றும் அறநெறிப்பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெறும். அவ்வகையில் திருமாலின் அவதார மகிமைகளை எடுத்துக்காட்டுகின்ற கதைகளைக் காட்சியோடு கூடிய நாடகங்களாகவும், நடனங்களாகவும் மாணவர்கள் அளிக்கை செய்வார்கள். இவற்றில் ஏழாம் திருவிழாவன்று இடம்பெறும் வெண்ணெய் திருவிழா மிகவும் சிறப்பானது. குழந்தைக் கண்ணன் தன் தோழர்களுடன் வெண்ணெய் திருடி உண்டு தன் அன்னை யசோதையால் உரலில் கட்டுண்ட காட்சியை நாடக வடிவில் மாணவர்கள் அரங்கேற்றுவர். மேலும், ஒன்பதாம் நாளில் இடம்பெறும் உறியடி உற்சவமும் கண்களை நிறைக்கும் நிகழ்வாகும். பாற்கடல் துயிலும் நாராயணன், மாயங்கள் புரிகின்ற எங்கள் மாயவன் உறைகின்ற ஆலயத்தில் இடம்பெறவுள்ள இந்தப் பிரமோற்சவத்தை பகலும், இரவும் கண்டு களித்து திருமாலின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்லவண்ணம் இன்புற்று வாழ்வதே வரமாகும்.





வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய ஆவணி மஹோற்சவத்திருவிழாவின் பத்தாம் நாளான மஞ்சத் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




# ஜெனிவாவும் நாமும்!

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு, ஆணையாளர் வோல்கர் ட்ரக் தலைமையில், சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில், இலங்கை நேரப்படி பி.ப 2 மணியளவில் இன்று ஆரம்பமாகவுள்ளது. பேரவையின் முன்னைய கூட்டத்தொடர்களின்போது, இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், போர்க்குற்றங்களுக்கான பொறுப்புக்கூறலை நிறைவேற்றுதல் மற்றும் மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் ஆகிய விடயங்களுக்காக இரு வருடகால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இந்த அவகாசம் கடந்த செப்ரெம்பருடன் முடிவுற்றிருந்தது. எனினும், அக்காலத்தில் இலங்கையில் இடைக்கால அரசாங்கமே ஆட்சியில் இருந்தபடியால் 'நிகழ்காலச் சூழல்களைக் கருத்திற்கொண்டு' இலங்கைக்கு எதிரான முன்னைய தீர்மானம் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியிலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கைக்கு மேற்கொண்ட கண்காணிப்புப் பயணம் காரணமாகவும், இம்முறை இலங்கை அரசாங்கத்தை சர்வதேசம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பதில் பெரும் எதிர்பார்ப்பு நிலவுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 59ஆவது கூட்டத்தொடரில், நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இலங்கை இன்னும் நீண்டதூரம் பயணிக்கவேண்டும் என்றும், பொறுப்புக்கூறலுக்காக அனைத்துத் தரப்பையும் உள்ளடக்கிய பொறிமுறைகள் உருவாக்கப்படவேண்டும் என்றும் அத்துடன் தண்டனை விலக்களிக்கப்படும் போக்கை இலங்கை கைவிடவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது. இதற்குப் பதிலடியாக, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நிராகரிப்பதாகவும், இலங்கைக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வெளிப்புற ஆதாரங்களைச் சேகரிப்பதற்கான பொறிமுறைகளைத் திட்டவட்டமாக மறுப்பதாகவும் இலங்கை தன் நிலைப்பாட்டைக் கடந்த ஒக்ரோபரில் பதிவு செய்திருந்தது. இவ்வாறான பின்னணியிலேயே 60 ஆவது கூட்டத்தொடரை ஸ்ரீலங்கா அரசாங்கம் எதிர்கொள்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கைக்கு எதிராக இதுவரை முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைத் துடைத்தெறிவதற்கு இலங்கை எத்தனையோ முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் அத்தனையும் தோல்வியே கண்டன. இதுவரை இலங்கையை பொறுப்புக்கூறச்செய்வதற்கு சர்வதேசத்தால் முடியாவிட்டாலும், மறுமுனையில் தீர்மானங்கள் நீர்த்துப்போகவில்லை. ஆனால், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தின் பிரதான அனுசரணையாளரான அமெரிக்கா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து வெளியேறியமை தற்போது நிலைவரத்தைச் சிக்கலுக்கு உள்ளாக்கியிருக்கின்றது. பிரிட்டன், கனடா போன்ற இணையனுசரணை நாடுகள் தீர்மானத்தை முன்னகர்த்தத் தீர்மானித்து சில புதிய பிரேரணைகளை முன்வைக்கத் திட்டமிட்டுள்ளன. இது ஆறுதலான விடயமாக இருந்தபோதும், இதுவரைகாலமும் இலங்கைமீது இருந்து வந்த அழுத்தங்கள் தற்போது இல்லை என்பதை மறுத்துரைக்கமுடியாது.


நீதி எவ்வளவுக்கெவ்வளவு தாமதமாகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு குற்றவாளி தப்பித்துச் செல்வதற்கான வாய்ப்புகளையும் உருவாக்கவே செய்கின்றது. இறுதிப்போர் முடிவுற்று அடுத்தடுத்த ஆண்டுகளில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் காத்திரமான தீர்வுகள் எடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால், இரு வருடகால அவகாசங்களை ஐ.நா. தொடர்ச்சியாக வழங்கியதேதவிர, வேறெதையும் செய்ததாக இல்லை. ஆதலால், இவ்வருட அமர்வாவது தமிழர்களின் வேணவாவைப் பூர்த்திசெய்யுமா என்பதே தற்போதைய எதிர்பார்ப்பு.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


## நாளொரு நல்வார்த்தை

சொல்லில் இங்கிதம் என்பது
திறமையாகப் பேசுவதை விட சிறந்தது.

பிரான்சிஸ் பேகன்



# அபிவிருத்தித் திட்டங்களை காலக்கெடுவினுள் முடியுங்கள்



## ஜனாதிபதி அநுர பணிப்பு

கொழும்பு, செப்.8

**மாவட்ட மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் ஏற்படும் தாமதங்களைத் தடுத்து, அவற்றின் நன்மைகளைக் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் மக்களுக்கு வழங்குவது, மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளின் பொறுப்பாகும். ஓர் அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்படும்போது, அது நிறைவடையும் வரை இலக்குமயப்பட்ட திட்டத்தை அவர்கள் வைத்திருக்க வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

மொனராகலை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மொனராகலை மாவட்ட விசேட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை உரிய நேரத்தில் நிறைவுசெய்யத் தவறியதாலும், அவற்றின் திட்டக் காலங்களை நீடித்து, மதிப்பிடப்பட்ட செலவை அதிகரித்ததாலும், அந்தத் திட்டங்களின் நன்மைகளையும் முதலீடு செய்த நிதியின் பிரதிபலன்களையும் நாடு இழந்துள்ளது. இந்த ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் உரிய நேரத்தில் நிறைவு செய்ய வேண்டும். மக்களுக்கு அவசியமான அபிவிருத்தித் திட்டங்களுக்குஎந்த நேரத்திலும் நிதியொதுக்கத் தயாராக உள்ளோம். கிராமப்புற அபிவிருத்தித் திட்டங்கள் துரிதப்படுத்தப்படவேண்டும்- என்றார். (ச-இ)

# சஷீந்திரவுக்கு குருதியமுக்கம்



கொழும்பு, செப்.8

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ச, உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட உடல்நலக் காரணங்களால் சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மருத்துவ ஆலோசனையின் பேரில் அவரை சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் ஜகத் வீரசிங்க தெரிவித்தார். (ச-இ)

# கைக்குண்டுகள், தோட்டா மித்தெனியாவில் மீட்பு!

கொழும்பு, செப்.8

மித்தெனிய தலாவப் பகுதியில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்து கைக்குண்டுகளும், ரி- 56 ரகத்தைச் சேர்ந்த 18 தோட்டாக்களும் மீட்கப்பட்டுள்ளன. இந்தக் கைக்குண்டுகள் மற்றும் தோட்டாக்கள் காணியில் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை இந்தோனேசியாவில் கைதுசெய்யப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக்குழு உறுப்பினரான கெஹெல்பத்தர பத்மேவினால் வழங்கப்பட்ட தகவலுக்கமைய, அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வில், 42 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய ஐஸ் ரக போதைப்பொருள் உற்பத்திக்குப் பயன்படும் மூலப்பொருள் மற்றும் இரசாயனம் அடங்கிய கலவை மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# போதைப்பொருளுடன் தாய்லாந்து நபர் கைது

கொழும்பு, செப்.8

200 மில்லியன் ரூபா மதிப்புள்ள 20.9 கிலோகிராம் குஷ் போதைப்பொருளுடன் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் தாய்லாந்திலிருந்து வந்தார் எனக் கூறப்படுகிறது. (ச-இ)



# ராஜபக்சக்களின் சகா கைது

கொழும்பு, செப்.8

கெஹல்பத்தர பத்மேவின் ஐஸ் போதைப்பொருளுக்கான இராசாயனங்களை மறைத்துவைத்திருந்த குற்றச்சாட்டில் பொதுஜன பெரமுனவின் பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த நபர் மேல் மாகாண வடக்கு குற்றப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ச-இ)

நாளை

செவ்வாய்க்கிழமை - ஆவணி 24

09.09.2025

சுபநேரம் : 10.34 - 12.04

ராகுகாலம் : 03.04 - 04.34


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில் பரீட்சையில் ஜோன்.பொஸ்கோ மாணவி மாவட்டத்தில் இரண்டாமிடம்



யாழ்ப்பாணம்,செப்.8
2025ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலய மாணவி தீப்தி ஜெகானந்தன் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.
இவர் இந்தப் பரீட்சையில் 187 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தையும், மாவட்டத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். (27)

# தொழிற்சந்தைக்குள் பிரவேசிக்க மாணவர்களை ஊக்குவியுங்கள்

### கிளிநொச்சி மாவட்டச் செயலர் தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்.8
**சமூகத்தில் வேலையின்மை பிரச்சினை ஏற்பட்டுள்ளமையே சமூக விரோதச் செயற்பாடுகளுக்கு வழிகோலுகின்றது. எனவே மாணவர்கள் தொழிற்சந்தைகளுக்குள் பிரவேசிக்க அவர்கள் மத்தியில் தொழிற்யிற்சி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற ஒன்றுகூடல் நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் சித்தியடையாத மாணவர்கள் அடுத்த கட்டம் என்ன செய்வது என்று தெரியாமல், சரியான வழிகளைத் தெரிவுசெய்யாமல் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.
இதன்காரணமாக வேலையற்றோர் அதிகரித்துச்செல்கின்றனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச் சிறந்த தொழில்நுட்ப பயிற்சி நிலையங்களில் ஒன்றாக ஜேர்மன் தொழிற்பயிற்சி நிறுவனம் காணப்படுகிறது. இதனை எமது மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தினால், அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும், வெளிநாட்டு வேலைவாய்ப்புகளும் அதிகம் கிடைக்கும் - என்றார். (ச-214)



# சந்நிதி ஆலயச்சூழலில் குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம்,செப்.8
வரலாற்றுச் சிறப்புமிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயப் பெருவிழாவின், தேர்த்திருவிழாவை முன்னிட்டு முதல் முறையாக, ஆலயச்சூழலில், சிறப்புக் குருதிக் கொடை முகாம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. ஆலயத்தின் ஆற்றங்கரை வீதியில் அமைந்துள்ள மாதர் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் குருதிச் சேகரிப்பு இடம்பெற்றது. வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கலாமன்றம் ஆகியன இந்த முகாமை ஏற்பாடு செய்தன. (ச-66)



## இளைஞர் மன்றத்தின் 10ஆவது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம்,செப்.8
அராலி தெற்கு சைவத்தமிழ் இளைஞர் மன்றத்தின் 10ஆவது ஆண்டுவிழா, அராலி அகாயக்குளம் விநாயகர் திறந்த வெளியரங்கில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
அராலி கரைப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து, ஆலயத்திலிருந்து அரங்குவரை பண்பாட்டு ஊர்வலம் இடம்பெற்றது. ஊர்வலத்தின்போது பொம்மலாட்டம், சிலம்பாட்டம் என்பன இடம் பெற்றன. தொடர்ந்து அரங்கில் கலைநிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன.
இளைஞர் மன்றத்தின் தலைவர் பரமலிங்கம் திரிகரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், அகில இலங்கை இந்துமாமன்றத்தின் தலைவர் அபிராமி கைலாசப்பிள்ளை, சங்கானைப் பிரதேச செயலர் கவிதா உதயகுமார் மற்றும் இந்து இளைஞர் மன்றத்தினர், கல்விமான்கள், பெற்றோர், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)

## மணவாளக்கோலம்

யாழ்ப்பாணம், செப்.8
சாவகச்சேரி கெருடாவில் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி தேவஸ்தானத்தின் மணவாளக்கோல விழா ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ தேவ பிரசன்னாக் குருக்கள் தலைமையில் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 10மணிக்கு இடம் பெறவுள்ளது.
இதன்போது 1008 சங்காபிஷேகமும், விசேட வழிபாடுகளும், சுவாமி வீதியுலாவும் இடம்பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா க.கந்தசாமி தெரிவித்துள்ளார். (ச-41-131)

## திருக்கல்யாண உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.8
சாவகச்சேரி கெருடாவில் அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி ஆலய வருடாந்தப் பெருவிழா கடந்த 28ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றது. உற்சவங்கள் ஆலயப் பிரதமகுரு பிரம்மஸ்ரீ தேவ பிரசன்னாக் குருக்கள் தலைமையில் நடைபெறுகின்றன. இன்று திங்கட்கிழமை திருக்கல்யாண உற்சவம் நடைபெறவுள்ளது. (ச-41-131)

## சட்டவிரோதக் கடற்றொழில் தடுக்க நடவடிக்கையில்லை

### வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்க உபதலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்.8
வடமராட்சிக் கடற்பரப்பில் சட்டவிரோத உள்ளூர் இழுவைமடித் தொழில் அதிகரித்துவருகின்றது. இது தொடர்பாகப் பல்வேறு முறைப்பாடுகளைக் கடற்றொழில் மற்றும் நீரியல்துறை அமைச்சருக்கு வழங்கியும் எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. இதனால், மீனவர் சமூகம் தொடர்ந்தும் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றது என்று வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உப தலைவர் நா.வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார். வடமராட்சியில் அவரது இல்லத்தில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மீனவர்களின் பிரச்சினைகளைக் களைவதற்கு எவரும் இல்லை. மீன்பிடி அமைச்சர் இதுதொடர்பில் காத்திரமான நடவடிக்கை எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே இந்தச் சட்டவிரோதக் கடற்றொழிலைத் தடுப்பதற்கு ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண்டும் - என்றார். (ச-66)





பிரான்பற்று பெரியவளவு முருகன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா நேற்றுச் சிறப்பாக இடம்பெற்றது. (ச-17)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டி சாதித்த மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய ரீதியாக முதலிடம் பெற்ற புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் முதல்வர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் கல்லூரியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், சிறப்பு விருந்தினராக யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் உள்ளிட்டோருடன் கல்லூரியின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பழையமாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25.27)



புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் ஸ்ரீ பொன்னம்பல ஞானவேலாயுதசுவாமி ஆலய தர்மகர்த்தா சபையினரின், அறநெறிப்பாடசாலைக் கட்டடத்திறப்புவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. நிகழ்வில் அறநெறிப்பாடசாலையால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆலய தர்மகர்த்தா சபையினரால் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் 65 பேருக்கு வங்கிக்கணக்குகள் மக்கள் வங்கியில் திறக்கப்பட்டு, மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன. (ச-24-6)



# மறைந்த ஊடகவியலாளர் பிரகாஷின் நினைவேந்தல்

யாழ்ப்பாணம், செப். 8

கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மறைந்த இளம் ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷின் நான்காவது ஆண்டு நினைவேந்தல் யாழ். ஊடக அமையத்தில் கடந்த வியாழக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் பிரகாஷின் குடும்பத்தினர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், முன்னாள் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா. கஜதீபன், ஊடகவியலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது பிரகாஷின் குடும்பத்தினரால் ஊடகவியலாளர்களுக்கான மருத்துவ உதவித் திட்டம் அறிமுகம் செய்துவைக்கப்பட்டதோடு முதற்கட்டமாக ஒரு இலட்சம் ரூபா நிதி ஊடக அமையத்திடம் வழங்கி வைக்கப்பட்டது.

சுயாதீன ஊடகவியலாளரான ஞானப்பிரகாசம் பிரகாஷ், யாழில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், செய்திகள் எழுதிவந்ததுடன், உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்களிலும் செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வந்திவந்தார். இவர் கடந்த 2021ஆம் ஆண்டு செப்ரெம்பர் 2ஆம் திகதி கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. (ச-40,



# அனலைதீவு அஞ்சலகத்தில் "பி.ஓ.சி.கனெக்ட்" திட்டம்

அனலைதீவு, செப். 8

அஞ்சல் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை வங்கியானது அனலைதீவு அஞ்சல் அலுவலகத்தில் "பி.ஓ.சி கனெக்ட்" எனும் திட்டத்தின் ஊடாக தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. இந்த முயற்சியின்மூலம், இலங்கை வங்கியின் வாடிக்கையாளர்கள் அனலைதீவு அஞ்சல் அலுவலகம் ஊடாக வைப்புகள், மீளப்பெறல்களை மேற்கொள்ள முடியும். அத்துடன் பொதுமக்கள் நிதிசார் சேவை வழங்கல் இலக்கின பட்டியல்களைச் செலுத்துதல், கடன்தவணைக் கட்டணங்கள் செலுத்துதல் போன்றவற்றையும் மேற்கொள்ளமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

# சூழலியல் செயற்றிட்டம் விசேட கலந்துரையாடல்

மன்னார், செப். 8

மன்னார் மாவட்டத்தில் உலகளாவிய சுற்றுச்சூழல் மன்றத்தின் நிதியுதவியுடன் யு.என்.டி.பி. நிறுவனத்தின் சிறு நன்கொடைத் திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படும் சூழலியல் மேம்பாட்டு செயற்றிட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான கலந்துரையாடல் மன்னார் மாவட்ட மேலதிக செயலர் எம். பிரதீப் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.



இந்தச் செயற்றிட்டத்தின்கீழ் பள்ளிமுனைக் குளம் புனரமைப்பு, பேசாலை முருகன் கோவில் கிராமப்பனைபொருள் உற்பத்திக்கான உதவிகள். அடம்பன் மற்றும் வேட்டையன் முறிப்பு மாதிரிப் பண்ணை அமைப்பு, முசலிப் பிரதேச கிரவல்குழிக் கிராம வயல்நீர்ப்பாசனக் கால்வாய்த் திருத்தம், மன்னார் நகரக் கழிவுமுகாமைத்துவ வசதிகள், கண்டற்தாவர மீள்நடுகை போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ச-25, 213)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை பெரும் முன்னேற்றம்

## கூறுகின்றார் அமைச்சர் நளிந்த

இலங்கையில் கடந்த காலங்களைவிட, தற்போது மனித உரிமைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன என் பதை சர்வதேசம் ஏற்றுள்ளது என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வு இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. இந்த அமர்வில் இலங்கை தொடர்பில் எவ்வாறான முடிவுகள் எடுக் கப்படும் என்று பெரும் எதிர்பார்ப்புகள் ஏற்பட்டுள் ளன. இவ்வாறான நிலையிலேயே, தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியின் மனித உரிமைகள் மேம்பட்டுள்ளன என சர்வதேசம் ஏற்றுள்ளது என்று அமைச்சர் நளிந்த கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இலங்கையில் கடந்த காலங்களைவிட தற்போது ஜனநாயகம் பேணப்படுகின்றது என்பதும், மனித உரிமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதும் வெளிப்படையான விடயம். அதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் ஏற்றுள்ளார். சில பரிந்துரைகளையும் அவர் முன்வைத்துள்ளார். அந்தப் பரிந்துரைகளை நிறை வேற்றுவது தொடர்பில் நாங்கள் கவனம் செலுத்தி யுள்ளோம் - என்றார். (ம-44)



# பரிசளிப்பும் திறப்புவிழாவும்

யாழ்ப்பாணம், செப்.8

உசன் இராமநாதன் மகாவித்தியா லயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வு, புனரமைக்கப்பட்ட அலு வலகத் திறப்புவிழா மற்றும் நூற் றாண்டு விழா அங்குரார்ப்பண நிகழ்வு என்பன எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

அதிபர் க.உமா பாலன் தலை மையில் நடை பெறவுள்ள நிகழ்வில் உசன் கந்தசு வாமி கோவில் பிரதம குருக்கள் வணக்கத்துக்கு ரிய பிரம்மஸ்ரீ இரத்தினசபா பதிக் குருக்கள் கேதீஸ்வரக்கு ருக்கள், மிருசு வில் பங்குத் தந்தை வணக் கத்துக்குரிய அருட்பணி சாமிநாதர் ஜோன் குவைன் ரின் ஜெயரஞ் சன் ஆகியோர் ஆசியுரையினை வழங்கவுள்ள னர்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக பழையமாணவ ரும் தென்ம ராட்சி ஒருங்கி ணைப்புக்குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான க.இளங்கு மரன் பங்கேற்க வுள்ளார். (ச-41-159)



வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய விசுவாவசு வருட மஹோற்சவப் பெருவிழாவின் தீர்த்தத் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கி ழமை ஆலயத் தீர்த்தக் கேணியில் பல்லாயிரக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக நடைபெற் றது. தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு நூற்றுக்கணக் கான அடியவர்கள் காவடிகள் எடுத்து நேர்த்திக் கடன்கள் நிறைவேற்றினர். (ச-66)

## காணி விற்பனைக்கு

திருநெல்வேலியில் 2, 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

பலாலி வீதியில் இருந்து 75 மீற்றர் தூரத்திலும் மக்கள் வங்கியில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் உள்ளது.

தொடர்புகளுக்கு: **077 253 2575**

## விழிநீர் சொரிகின்றோம்

கடந்த 04.09.2025 வியாழக்கிழமை அன்று, பதுளை எல்ல - வெல்லவாயா பகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் சிக்கி உயிர்நீத்த, தங்காலை நகர சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் மற்றும் ஏனைய உறவுகளுக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதோடு, அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆறாத்துயருடன்...**
**மாந்தை கிழக்கு பிரதேச சபை,**
**பாண்டியன்குளம்,**
**நட்டாங்கண்டல்.**

(CS 46013) E

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 08 . 06 . 1975



**மறைவு** 06 . 09 . 2025

### வானதி பிரதீப்குமார்

அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வானதி பிரதீப்குமார் நேற்று முன்தினம் 06.09.2025 சனிக்கிழமை காலமாகினார்.

அன்னார் காலஞ்சென்ற தேவராஜா மற்றும் மஞ்சுளா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், அலோசியஸ் ஆனந்தராசா - சிவகங்கை தம்பதியரின் அன்பு மருமகளும், பிரதீப்குமாரின் அன்பு மனைவியும், சூரியப்பிரியா, யதுர்ஷன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், அகிலனின் அன்பு மாமியாரும், கஜேந்திரன் (UK), சுகந்தன் (UK), றோகன்குமார் (France) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லக்ஷி (UK), வினுஷா (UK), கார்த்திகா (ஆசிரியர்), தர்சினி, சுபாசினி, டிலக்ஷனா, கவிசங்கர் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சத்தியகாந், கிருத்திக், ஷியன்னா, விதுன், நிதுனா, லதுஷிகா ஆகியோரின் அன்பு மாமியாரும், நிர்மலா (France), காலஞ்சென்ற ஜெயந்தி மற்றும் வசந்தி (France), தாரணி, பாமினி ஆகியோரின் பெறாமகளும், சிவேந்திரனின் (France) மருமகளும், ஆறுமுகநாத், இரட்ணநாத், யோகநாத், ராசிலா, ராசிகா, லாமிர், கோபிகா, கஜமுகா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்பிள்ளை, சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 08.09.2025 திங்கட்கிழமை இல 19 கனகரத்தினம் வீதி, அரியாலையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 03.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல 19 கனகரத்தினம் வீதி,**
**அரியாலை**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**075 [illegible]**

(CS 59343) E

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 . 04 . 1975



உதிர்வு 21 . 09 . 2021

**அமரர் பாலசுப்பிரமணியம் பிறேம்லால்**
**(மக்கள் வங்கி உத்தியோகத்தர்)**


திதி - அபரபக்கபிரதமை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து–இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
எங்கள் குலவிளக்கே.....!
உம் புன்னகைவிரிந்த பூமுகம் காண வழியின்றி தவிக்கின்றோம்
இங்கு பெருவெளியாய் காட்சியளிக்கிறது உமக்கான இடம்
கொடியின் வேரும் அறுந்து போனால்
மலரின் சிறப்பும் சருகாய் உதிர்வது போல
உம் பேரிழப்பால் நாம் துயருற்று நிலை தளர்ந்தோம்
வீசும் காற்றினாலும் நாம் விடும் மூச்சினாலும்
எட்டுத்திக்குகளிலும் உங்கள் நினைவால் வாடுகிறோம்
விழியோரம் கசியும் கண்ணீர்த்துளிகளை–உம்
பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்.

**04, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**உம்பிரிவால் வாடும்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மது நபி பிறந்ததினத்தை முன்னிட்டு அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மன்னார் நகரக் கிளை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் விடுதிக்குத் தேவையான புத்தக அலுமாரி, விடுதியின் பாதுகாவலருக்கான படுக்கை விரிப்பு மற்றும் சிறுவர் விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த சிறுவர்களுக்கு சிறு அன்பளிப்புப் பொருள்கள் போன்றவற்றை கடந்த வெள்ளிக்கிழமை வழங்கி வைத்தது. (ச-25.60)



கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நூற்றுக்கணக் கான அடியவர்களின் பங்கேற்புடன் பக்திபூர்வமாக இடம்பெற்றது. வரணி குடமியன் ஆதிசிவன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. இராம ஸ்ரீரங்கநாத சிவாச்சாரியாரைப் பிரதிஷ்டா பிரதம குருவாகக் கொண்டு சிவாச்சாரியார்கள் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவை நடத்திவைத்தனர். (ச-66)



கொல்லங்கலட்டி சைவத் தமிழ் வித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய நா.பிரியந்தனின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. (ச)



தென்மராட்சிக் கல்வி வலயப் பாட சாலைகளில் கடமையாற்றி ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் பதவியுயர்வு பெற்ற அதிபர் கள் மதிப்பளிப்பு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. தென்மராட்சி அதிபர் கள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற நிகழ்வில் முதன்மை விருந் தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலரா ஜன் கலந்துகொண்டார். (ச-9)

## விளையாட்டு நிகழ்வு





யாழ்ப்பாணம், செப்.8

சாவகச்சேரிப் பிராந்தியத்தால் 103ஆவது கூட்டுறவு தினவி ழாவை முன்னிட்டு அங்கத்த வர்களுக்கான விளையாட்டு நிகழ்வு யாழ்.மாவட்ட சி.க.கூ. சங்க சமாசத்தின் தலைவர் திருமதி ச.பரமானந்தன் தலைமையில் கடந்த சனிக் கிழமை சாவகச்சேரி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தில் இடம்பெற்றது. (ச-41-159)

## கிருஷாந்திக்கு...

பிடிக்கப்பட்டது. இந்த நினைவேந்தல் நிகழ்வு நேற் றுக் காலை யாழ்ப்பாணம், செம்மணிச் சந்தியில் நடத்தப்பட்டது. கிருஷாந்தியின் சிறியதந்தை பொதுச் சுடரேற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித் தார். அதைத் தொடர்ந்து கிருஷாந்திக்கும், விடுத லைப் பயணத்தில் தமது இன்னுயிர்களை ஆகுதி யாக்கிய மாவீரர்களுக்கும், பொதுமக்களுக்கும் ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. கிரு ஷாந்தியின் நினைவுச் சிற்பம், உருவப்படத்துடன்



கூடிய நினைவுத் தூபிக்கு மலர்மாலைகள் அணி விக்கப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், நினைவுரைகளும் நடைபெற்றன. "கிருஷாந்தி..." என்ற கவிதைத்தொகுப்பு நூலும் வெளியிடப்பட் டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் கிருஷாந்தியின் உறவினர்கள், பொதுமக்கள், அரசியல் தலைவர் கள், பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

உயர்தர வகுப்பு மாணவியான கிருஷாந்தி குமார சுவாமி 1996ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி இராணுவத்தினரால் கூட்டு வன்புணர் வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். கிருஷாந்தியைத் தேடி செம்மணியில் இருந்த இரா ணுவச் சோதனைச் சாவடிக்குச் சென்ற அவரது தாய், அவரது தம்பி, அயலவர் ஆகியோரும் கொல்லப்பட்டனர். சம்பவம் நடைபெற்று 45 நாள் களுக்குப் பின்னர் அவர்களின் உடல்கள் செம்ம ணியில் கண்டுபிடிக்கப்பட்டன. (அ-ஏ-20-26-66)





வடக்கு மாகாண தொழிற்று றைத் திணைக்களத்தின் ஏற் பாட்டில் உடுவில் பிரதேச செயலகத்தில் மாதாந்தம் நடைபெற்றுவரும் சந்தை யின் ஓகஸ்ட் மாதத்துக்கான சந்தை மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரி வின் சிறு சந்தை ஆகியன அண்மையில் நடைபெற் றன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனையாளர் மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 8

1996ஆம் ஆண்டு கல்விப் பொது சாதாரண தரத்தில் கல்விகற்ற மாணவர்களால் உருவாக்கப்பட்ட கிளிநொச்சி சாதாரணதர அமைப்பின் ஏற்பாட்டில் 2025ஆம் ஆண்டுக்கான ஒன்றுகூடலும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

இதன்போது கிளிநொச்சி மாவட்டச் செயலரால் 2025ஆம் ஆண்டு உயர்தரத்தில் மாவட்ட ரீதியில் முதலாம் இடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள், விழிப்புணர்வற்றவர்களுக்கான டிஜிற்றல் முறையிலான வெள்ளைப் பிரம்பைக் கண்டுபிடித்த மாணவன் ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். (ச-41-113)



பளை முகாவில் மல்வில் கிருஷ்ணன் கோவிலுக்குப் புதிய சித்திரத்தேர் அமைப்பதற்கான நிதி சேகரிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கோவிலில் இடம்பெற்றது. (ச-41-9)





# செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், செப். 8


இணுவில் பொதுநூலக சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதன்போது கலாசார நிகழ்வுகள், விளையாட்டுகள், இசையும் அசைவும் நிகழ்வு, பரிசில்கள் வழங்கல் என்பன இடம்பெற்றன. ம.கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-27)

# விடுதலை நீர் சேகரிப்பில் இந்தியப் புனித நீர் சேர்ப்பு

சிறையில் வாடும் அரசியற்கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அதற்கு வலுச்சேர்க்கும் முகமாக புலம்பெயர் தேசங்களில் இருந்தும் விடுதலை நீர் சேகரிப்பு இடம்பெற்று வருகின்றது. அதனடிப்படையில் காசி உட்பட இந்தியாவின்பலதீர்த்தங்களில் இருந்து புனித நீர் எடுத்துவரப்பட்டு விடுதலை நீர் சேமிக்கப்பட்டது. இந்த நிகழ்வு சிவகுரு ஆதீனத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தவத்திரு வேலன் சுவாமிகள், காணாமல் ஆக்கப்பட்டோரது சங்கத்தினர், அரசியற்கைதிகளின் உறவுகள், குரல் அற்றவர்களின் குரல் அமைப்பினர், தென்னிந்தியாவில் இருந்து வருகைதந்த உறவுகள், யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-25,27)





கிராம மக்களது முயற்சியால் அமைக்கப்பட்ட கொட்டடி சோலைபுரம்கவிபாரதிசனசமூகநிலையத்தின் புதிய கட்டடம் கடந்த வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டது. யாழ்ப்பாண பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் கட்டடத்தைத் திறந்துவைத்தார். நிகழ்வில் யாழ். மாநகரசபை உறுப்பினர் சி.சாரூபன், வாசு, சமூகமட்ட அமைப்பின் பிரதிநிதிகளான இ. மகிதரன், தெ.நிஷாகரன், ஜோ.ரதீஸ் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் பிரதிநிதி மு. கோமகன், கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கவி பாரதி சனசமூக நிலைய அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-27)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்தப் பெருவிழாவில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தெல்லிப்பழைப் பிரிவின் தலைவர் சி.நாகேஸ்வரன் தலைமையில் அடியவர்களுக்கு இலவச முதலுதவிச் சேவை வழங்கப்பட்டது. (ச-41-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மழைக்கு...

வடகீழ்ப் பருவக்காற்று எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் மூன்றாவது வாரத்தில் தொடங்குவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றும், இந்த ஆண்டு வடகீழ்ப் பருவக்காற்று மழை சராசரியை அண்மித்ததாகவே காணப்படும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

500 மில்லிமீற்றர் முதல் 600 மில்லிமீற்றருக்கு இடைப்பட்ட அளவிலேயே மழை கிடைப்பதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. இவ் ஆண்டு ஐந்துக்கும் மேற்பட்ட தாழமுக்கங்கள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-66)

## நீதியை...

கப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டபோது அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டில் நடந்த குற்றங்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களைத் தேடி நீதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளோம். ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்கு இயலுமான முயற்சிகளை எடுக்கின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான தேடலை வேகப்படுத்தியுள்ளோம். காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தைப் பலப்படுத்தி அதன் செயற்பாட்டை வேகப்படுத்தியுள்ளோம். பிரதானமாக செஞ்சிலுவைச் சங்கத்துடன் இது தொடர்பான கலந்துரையாடலை நடத்தியுள்ளோம்.

அனைத்து மக்களுக்கும் நீதியை வழங்குவதற்கு அரசாங்கம் என்ற வகையில் நாம் முயற்சிக்கின்றோம் - என்றார்.

ஆயினும் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அவர் நேரடியாக எதையும் தெரிவிக்கவில்லை. (அ-எ-26)

## நிமலராஜன்...

தினர் இந்த விசாரணை அறிக்கையைக் கையளித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் அமைக்கப்பட்ட பொது ஜன நூலகம் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவால் நேற்றுத் திறக்கப்பட்டது. அந்த நிகழ்விலேயே அவரிடம் விசாரணை அறிக்கை கையளிக்கப்பட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. (அ-எ-26)

## சர்வதேசத்தின்...

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலர் ரில்வில் சில்வா தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இனப்படுகொலை மற்றும் வடக்கு, கிழக்கு மனிதப் புதைகுழிகளுக்கு சர்வதேச நீதிகோரி முன்னெடுக்கப்படும் கையெழுத்துச் சேகரிப்புத் தொடர்பாக அவரிடம் வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்தகால அரசாங்கங்களில் இவை தொடர்பான விசாரணைகள் நடக்கவில்லை என்பது உண்மை. ஏனென்றால் அந்தக் குற்றச்சாட்டுகளுடன் அவர்கள் தொடர்புடையவர்களாக இருந்தனர். குற்றங்களைச் செய்தவர்கள் நியாயம் வழங்கமாட்டார்கள்.

ஆனால் தற்போதுள்ளது மக்களுடைய ஆட்சி. மக்களுக்கு நீதியை வழங்குவது எமது பொறுப்பாக இருக்கின்றது. அதற்கு சர்வதேசத் தலையீடுகள் தேவையில்லை. எமது நாட்டுக்குள் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இலங்கைச் சட்டத்துக்கு அமைய நீதியை வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். அது தொடர்பில் எவரும் சந்தேகப்படத் தேவையில்லை - என்றார். (அ-எ-26)

## விசாரணைக்குப்...

சர்வதேசத்திடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் விசாரணைப் பொறிமுறைக்குப் பொறுப்பானவர்களாக இலங்கையே இருக்கமுடியும். அந்தப் பொறுப்பில் சர்வதேசம் இருக்கமுடியாது என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உண்மையில் உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையாலேயே ஜெனிவா குற்றச்சாட்டுகளும் நெருக்கடிகளும் வலுப்பெற்றுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று, வெறும் அறிக்கைகளை சமர்ப்பித்து வந்துள்ளார்களே தவிர அங்கு வழங்கும் உறுதிமொழிகளை உள்நாட்டில் நிறைவேற்றுவதில் எவரும் ஆர்வம் செலுத்தவில்லை.

சர்வதேசத்துடன் தொடர்புபட்ட விடயங்களாக இவற்றைக் கருதும்போது இது வொரு தவறான அணுகுமுறையாகும். ஜெனிவா மனித உரிமைகள் விடயத்தில் வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுவது, கொள்கை ரீதியாகச் செயற்படுவது என்பது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே தீர்மானங்களை எடுத்துள்ளது. உதாரணமாக செம்மணி மனித புதைக்குழி உட்பட பல சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஊடகங்களை அழைத்துச் சென்று அந்த விசாரணைகளைப் பிரசாரம் செய்ய வேண்டிய தேவை இல்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எந்தவொரு விசாரணைக்கும் அரசாங்கம் தடையாக இருக்கவில்லை என்பதை அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆதாரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்யலாம். சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

ஜெனிவா குற்றச்சாட்டுகளுக்கு அப்பால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் முதன்மையான கடமையாக உள்ளது. அதனால் ஜெனிவா சக்கரத்தில் இருந்து முதலில் வெளிவர வேண்டும். பொறுப்புக்கூறல் விசாரணைகளை முன்னெடுப்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையை திருப்திப்படுத்துவதற்காகவோ அல்லது மகிழ்விப்பதற்காகவோ அல்ல. மாறாக எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள்ளோம். முக்கியமாக இந்த அரசாங்கம் அவர்களுக்கு உரியது என்பதை பாதிக்கப்பட்ட மக்கள் உணர வேண்டும்.

ஜெனிவா குற்றச்சாட்டுகளில் நிபுணத்துவ ஒத்துழைப்புகளை சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளவும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படவும் தயாராகவே உள்ளோம். ஆனால் விசாரணைகளின் பொறுப்பாளராக இலங்கையே இருக்கும். வெள்ளைக்கொடி மாத்திரமல்ல முன்னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு விசாரணைகளுக்கும் அரசாங்கம் தடையாக இருக்காது - என்றார். (அ-எ-இ)

## ஆண்...

மருத்துவர்கள் சிசு ஏற்கனவே உயிரிழந்திருந்ததை உறுதிப்படுத்தியுள்ளனர். பால் புரைக்கேறியதால் சிசு உயிரிழந்துள்ளது என்து தெரிவிக்கப்படுகின்றது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் முன்னெடுத்தார். (அ-எ-26)

## கச்சதீவு...

இவ்வாறு பதிலளித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமக்கு இந்தியாவுடன் நெருங்கிய உறவு உள்ளது. இந்திய மத்திய அரசாங்கம் கச்சதீவு தொடர்பான எந்தக் கோரிக்கையையும் முன்வைக்கவில்லை.

தமிழகத்தில் நடக்கும் பிரசாரங்களை எம்மால் புரிந்துகொள்ளமுடியும். தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கும்போது மக்களைக் கவருவதற்காக இவ்வாறான கருத்துகளைக் கூறுகின்றனர். ஆனால் சட்டரீதியாக அதற்கான வாய்ப்புகள் இல்லை. கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானது என்பதே எமது நிலைப்பாடு - என்றார். (அ-எ-26)

## வெளியக...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வு இன்று ஆரம்பமாகவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், அண்மையில் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கையை வெளியிட்டிருந்தார். உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக பாதிக்கப்பட்ட மற்றும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுக்க ஆக்கபூர்வமான செயன்முறையை நோக்கி அரசாங்கம் நகர வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தின் ரோம் பிரகடனத்துக்கு இணங்குவதன் ஊடாக நிலைமாறுகால நீதிக்கு ஏதுவான சூழலை இலங்கை அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆணையாளரின் அறிக்கையில் உள்வாங்கப்பட்ட கரிசனைகளுக்குப் பதிலளித்து, ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிட அலுவலகத்தால் அனுப்பப்பட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு இலங்கையின் நிலைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான விடயங்கள் வருமாறு;

மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாடு, நல்லிணக்கச் செயன்முறையை வலுப்படுத்துதல், பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கம், ஊழல் ஒழிப்பு, நிகழ்நிலை காப்புச் சட்டம் திருத்தம் போன்ற விடயங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கடந்த ஜூன் மாதம் நாட்டுக்கு வந்திருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க்குக்கு விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

அதேபோன்று காணாமல் போனோர் பற்றிய அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் போன்ற கட்டமைப்புகளின் சுயாதீனத்தன்மையை உறுதிப்படுத்துவதன் ஊடாகவும் அவற்றுக்கு அவசியமான நிதி மற்றும் மனித வளங்களை ஒதுக்கீடு செய்வதன் ஊடாகவும் உள்ளக நல்லிணக்க பொறிமுறைகள் வலுப்படுத்தப்படுகின்றன.

தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சகல தரப்பினருடனான கலந்துரையாடல்கள் மற்றும் சட்ட உருவாக்கத்தை தொடர்ந்து உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்படும். பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தும் வகையில் சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகமும் நிறுவப்படும். பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை இந்த மாதளவில் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆணையாளரின் அறிக்கையில் இலங்கை நிலைமாற்றத்துக்கு வழிவகுக்கக் கூடிய மறுசீரமைப்புகளை மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. அதற்கான வாய்ப்பை பயன்படுத்துவதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்றும், இலங்கையர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை மேம்படுத்துவதற்கு இடமளிக்கவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்திடமும், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையிடமும் கோருகிறோம்.

எந்தவொரு வெளியகப் பொறிமுறைகளும் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தேசிய முயற்சிகளுக்கு இடையூறாகவே அமையும் என்பதையும், அவை சமூகங்களை துருவமயப்படுத்தும் என்பதையும் அவதானித்துள்ளோம். எனவே ஆணையாளரின் அறிக்கையில் சர்வதேச நடவடிக்கைகள் தொடர்பில் உள்வாங்கப்பட்டுள்ள முடிவுரையையும் பரிந்துரையையும் இலங்கையால் ஏற்றுக்கொள்ளமுடியாது.

இன, மத, வர்க்க பேதங்களின் அடிப்படையிலான பிளவுகளோ அல்லது ஒடுக்குமுறைகளோ அற்ற, பல்லினத்தன்மையைக் கொண்டாடக்கூடிய நாட்டை கட்டியெழுப்புவதற்கான அர்ப்பணிப்புடன் கூடிய கடப்பாட்டையும் மக்கள் ஆணையையும் அரசாங்கம் கொண்டிருக்கிறது. இலங்கையில் இனவாதமோ, தீவிரவாதமோ தலைத்தூக்குவதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்காது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

காணி விற்பனைக்கு
மீசாலையில் 20 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
தொடர்பு: 077 253 2575

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

HIKVISION PLATINUM DEALER PARTNER
EZVIZ
NALIN Information Technologies (Pvt) Ltd
Computers of the North



HIKVISION EZVIZ
கமராக்களுக்கு எங்கும் இல்லாத அதிகவிலைக் கழிவில்...
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்...
விலை வித்தியாசத்தை உணர்வீர்கள்...


Micro SD 128GB
- KINGSTON 2550/-
- LEXAR 2400/-
- RUNAK 2150/-

CCTV Camera நிறுவுவதற்குரிய (Installation)
அனைத்துவிதமான பாகங்களும் விலை குறைக்கப்படுள்ளன.
MONITOR, 3C2V CABLE, HDD, BNC, CABIN, STAND, DVR, POWER PACK, TT CABLE, UPS, MOUSE, HDMA CABLE, WALL MOUNT
TERM & CONDITIONS APPLIED

EZVIZ FREE INSTALLATION (Only for Specific Models) HOT LINE: +94 76 359 4367

| JAFFNA | KILINOCHCHI | MANNAR | NALIN IT EXCLUSIVE |
|---|---|---|---|
| 195/2 Parameswara Junction, Palaly Road, Jaffna. | No.44, A9 Road, Central College Opposite, Kilinochchi. | No.208 A, Hospital Road, Mannar. | No.51, Stanley Road, Jaffna. (Infront of BOC) |
| 077 766 7975 \| 021 222 1121 | 076 359 7610 \| 021 228 5550 | 076 359 4368 \| 023 222 2500 | 076 359 4359 \| 021 221 0404 |

# மரண அறிவித்தல்



## கைலாசபிள்ளை பஞ்சரட்ணம்

### (உரிமையாளர், மானிப்பாய் மில்)

யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை பஞ்சரட்ணம் அவர்கள் நேற்று (07.09.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை (ஸ்தாபகர், மாப்பியன் மில், மானிப்பாய்) - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்வரட்ணம் - மகாலக்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் விலாசினி அவர்களின் பாசமிகு கணவரும், சிவானுஜா, பிரகலாத் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சபேசன், சியாமி ஆகியோரின் அன்பு மாமனாரும், அமிர்தரட்ணம், சுகிர்தரட்ணம், காலஞ்சென்றவர்களான யோகரட்ணம், தர்மரட்ணம், ஞானரட்ணம், விஜயரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், புவனராணி, மகேந்திரன், ஜெகத்ஜெனன் - கலா, இன்பா - சிவா, ரசிகா - ராசகுலேந்திரன், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, தனபாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அபர்ணா, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.09.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 02.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.10.1947 | 07.09.2025 |

யோகஸ்தி
மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்

தகவல்:
குடும்பத்தினர்

(C5 5932S) E



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org